**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரக அரசு மறுவாழ்வு இல்லங்கள் – கூடுதலாக கண்டறியப்பட்ட தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை – ரூ.10,44,000/– நிதி ஒப்பளிப்பு – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (டி) எண்: 16** **நாள்: 27.05.2019**
**விகாரி – வைகாசி, 13**
**திருவள்ளுவர் ஆண்டு, 2050**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (டி) எண் 66, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 12.07.2013.
2. அரசாணை (நிலை) எண் 1, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–1)த் துறை, நாள் 23.01.2019.
3. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கடித ந.க. எண் 2650/ம.இ.நிர்–1/2018, நாள் 21.02.2019 மற்றும் 28.02.2019.

-----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 2013–2014ஆம் நிதியாண்டிலிருந்து இத்திட்டத்திற்கென வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்குள் ஏற்கனவே பயன்பெறும் பயனாளிகளுக்கு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் மூலமாக ஒவ்வொரு மாதமும் மைய வங்கி முறையின் (Core Banking System) கீழ் பராமரிப்பு உதவித் தொகை வழங்க, முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதியும், கூடுதலாக பயனாளிகள் கண்டறியப்பட்டால் இத்திட்டத்தின்கீழ் பராமரிப்பு உதவித் தொகை வழங்க வரவு–செலவு திட்டத்திற்கு மேலாக கூடுதல் நிதி ஒதுக்கீடு தேவைப்படின், அதற்குரிய கருத்துருவினை செப்டம்பர் மற்றும் பிப்ரவரி மாதங்களில் அரசுக்கு அனுப்பி வைக்க முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஏற்கனவே பராமரிப்பு உதவித் தொகை பெற்று வரும் தொழுநோயால் பாதிக்கப்பட்ட 6745 பயனாளிகளுக்கு பிப்ரவரி மற்றும் மார்ச் 2019 ஆகிய இரு மாதங்களுக்கு பராமரிப்பு உதவித் தொகையாக ரூ.1,16,92,000/– மற்றும் கூடுதலாக கண்டறியப்பட்ட 582 பயனாளிகளுக்கு செப்டம்பர் 2018 முதல் மார்ச் 2019 வரை 7 மாதங்களுக்கு பராமரிப்பு உதவித் தொகையாக ரூ.61,11,000/–, ஆக மொத்தம் ரூ.1,78,03,000/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தெட்டு இலட்சத்து மூன்றாயிரம் மட்டும்) கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களிடமிருந்து தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் பிப்ரவரி 2019ஆம் ஆண்டிற்கான காத்திருப்போர் பட்டியலின் அடிப்படையில் கூடுதலாகக் கண்டறியப்பட்ட 348

(த.பி.பா.)

பயனாளிகளுக்கு பிப்ரவரி மற்றும் மார்ச் 2019 ஆகிய இரண்டு மாதங்களுக்கு (2 மாதங்கள் x 348 பயனாளிகள் x ரூ.1,500/–) ரூ.10,44,000/– (ரூபாய் பத்து இலட்சத்து நாற்பத்து நான்காயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி–3ல் உள்ள மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரக அரசு மறுவாழ்வு இல்லங்களில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட 348 கூடுதல் பயனாளிகளுக்கு பிப்ரவரி மற்றும் மார்ச் 2019 ஆகிய இரண்டு மாதங்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை ரூ.10,44,000/– (ரூபாய் பத்து இலட்சத்து நாற்பத்து நான்காயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி–4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 – சமூக பாதுகாப்பும் நலனும்–02 – சமூக நலன் 104 முதியோர், இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் – மாநில செலவினங்கள் – KQ – தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்குதல்–309 – உதவித் தொகை–03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.

[த.தொ.கு 2235–02–104–KQ–30903]

6. மேலே பத்தி–4ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதயொதுக்கம் ரூ.10,44,000/– 2019–20ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி–4இல் அனுமதிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி–4ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2019–2020ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு /இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (ச.ந.) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண் 22786/நிதி(ச.ந)/2019, நாள் 24.05.2019 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண் 328 (முன்னூற்று இருபத்தெட்டு) இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை–5.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில கணக்காயர், சென்னை–18.
அனைத்து அரசு மறுவாழ்வு இல்லங்கள்.
(மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.

[த.பி.பா.]

**நகல்:**

நிதித் (சந/வ.செ.பொ.II) துறை, சென்னை–9.
செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.
உதிரி நகல் / இருப்பு கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.